## அன்பான மரியாதைக்குரிய இனிய தோழமைக்கு...

சென்னை அரசு குழந்தைகள் மருத்துவமனை மற்றும் அரசு மகப்பேறு மருத்துவமனையின் இரத்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் - உயிர் காக்கும் உயரிய நோக்கத்திற்காக, திரைக்கலைஞர் திரு.ரா. பார்த்திபன் அவர்களின் மனித நேய மன்றம் சார்பாக, 'மாபெரும் இரத்த தான முகாம்', நடைபெறவுள்ளது.

குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்களின் உயிர் நலனுக்காக நடத்தப்படும் இந்த நல்நோக்க விழாவில், 'சிறந்த மனித நேயன்' விருது பரிசளிக்கும் நிகழ்வும், திரு.ரா. பார்த்திபன் அவர்கள் வரவேற்பில், சமூக நல ஆர்வலர்கள், திரையுலக அன்பர்கள் முன்னிலையில் இடம்பெறுகிறது.

தொடர்ந்து எங்களை ஊடக வாயிலாக, வாழ்த்தி ஊக்கப்படுத்தும் உங்களை மிக மகிழ்வோடு வரவேற்கிறோம்.

**நாள் : மார்ச் 25, 2012 ஞாயிறு / நேரம் : காலை 8.45 மணியளவில்...**

இடம் :
லெக்ஷ்மி ஹால்,
முதல் அவென்யூ, ஜவஹர்லால் தெரு,
100 அடி ரோடு, அசோக் நகர், சென்னை.
(அசோக் பில்லர் - கோகுலம் பார்க் சிக்னல் - பிரபா டி.வி.எஸ். அருகில்)
தொடர்பு எண் : 044 24745806

-----------------------------------------------------

ரா.பார்த்திபன் மனித நேய மன்றத் தொடர்பாளர் :
திரு.அரவிந்தன் 7200142515

---

'சிறந்த மனித நேயன்' விருதுப் பரிசு பெறுபவர் பற்றிய... குறிப்பு :

கேரளா- எர்ணாகுளம் பகுதியைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் லாட்டரி வியாபாரி திரு. சுரேஷ். ஏழை. அவரிடம் பல வருடங்களாக லாட்டரி வாங்கும் பெரியவர், திரு. ஐயப்பன். 60 வயதைத் தாண்டிய அவருக்குத் திருமண வயதில் இரு பெண்கள். வறுமையைப் போக்க லாட்டரியாவது உதவாதா என்று தொடர்ந்து வாங்கி சலித்துப் போனவர், அன்றும் சுரேஷிடம் வந்து 5 லாட்டரி டிக்கெட்டுகளை வாங்கியுள்ளார். அதன் தொகை ரூ.250/-ஐ அடுத்த நாள் வந்துகொடுத்து பிறகு வாங்கிக்கொள்வதாகச் சொல்லி, அந்த 5 சீட்டுகளை சுரேஷிடமே சுருட்டிக் கொடுத்துவிட்டுக் கிளம்பினார்.

அடுத்த நாள். லாட்டரியில் திரு.ஐயப்பன் கொடுத்துவிட்டுப்போன ஒரு சீட்டிற்கு ரூ.1 கோடி விழுந்திருந்தது. ஐயப்பனைத் தேடிச் சென்று இந்தத் தகவலைச் சொல்லி, சீட்டைக் கொடுத்திருக்கிறார், சுரேஷ். அவரோ, 'பணம் கொடுக்காத எனக்கு, இப்பரிசு கிடைப்பது நியாயமில்லை!' என மறுத்திருக்கிறார். ஆனால், சுரேஷோ, 'நீங்கள் வாங்கிச் செல்வதாகச் சொல்லிக் கொடுத்துவிட்டுச் சென்றீர்கள். எப்படிப் பார்த்தாலும், இது உங்கள் லாட்டைச் சீட்டு. எனவே, இதற்கான தொகை ரூ.250/-மட்டும் தாருங்கள்!' என்று அந்தப் பெரியவரிடம் கோடிப் பணம்பெறுமானமுள்ள சீட்டை ஒப்படைத்துவிட்டுச் சென்றுள்ளார்.

ஏழ்மையிலும் நேர்மை - சுரேஷின் அழகான அடையாளம்!

எதிரே கோடியாய் பணப்புயல் வீசியபோதும், மனித நேயத்தைக் கெட்டியாய்ப் பிடித்து, சக மனிதனின் நம்பிக்கையைச் சம்பாதித்துக்கொண்ட அந்த கேரள சகோதரனை கௌரவிப்பது- விலை மதிப்பில்லாத அவரின் குணத்தை, அன்புத்தொகை கொடுத்து ஊக்கப்படுத்துவது, இத்தருணத்தில் அத்தியாவசியம் என்பதை உணர்ந்து,
திரு. ரா.பார்த்திபன் அவர்கள் - தனது மனித நேயம் மன்றம் மூலம் நடத்தும் 'இரத்த தான முகாம்' விழாவில் திரு. சுரேஷை அவரது குடும்பத்தாருடன் அழைத்து அன்பைப் பரிமாறிக்கொள்கிறார்.

(கோடிப் பண வரவிலும் நிதானமான - யதார்த்தமான நேர்மையுடன் மறுத்த பெரியவர் திரு.ஐயப்பனையும் அழைத்திருந்தார், திரு.பார்த்திபன். வயோதிகத்தின் காரணமாக பயணம் செய்து வர இயலவில்லை. எனவே, அவருக்கு வாழ்த்துகளை அனுப்பியுள்ளோம்.)

எங்கேயும் - எப்போதும் - எவருக்கு நல்லன நேர்ந்தாலும், எவ்விடத்தில் மனித நேய நிகழ்வு நடந்தாலும், அதை உள்ளன்போடு - துரிதமாய் - மக்கள் மனப்பார்வைக்குக் கொண்டு செல்லும், சமூக அக்கறை கொண்ட பத்திரிகை - ஊடக அன்பரான உங்களை இந்த நல்ல விழாவிற்கு, திரு. ரா.பார்த்திபன் அவர்களின் சார்பாகவும், 'ரா.பார்த்திபன் மனித நேய மன்றம்' சார்பாகவும் நட்பின் அன்போடு அழைக்கிறோம். வருகையில் பெருமை கொள்வோம்.

வருக... வாழ்த்துக!

அன்பின் அகமகிழ்வுடன்,

## ரா. பார்த்திபன் மனிதநேய மன்றம்